1993 பிப்ரவரி 8]

23. புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா மருத்துவ நலத்திட்டம், வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது. 9,226 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் '' அனைவர்க்கும் நல்வாழ்வு '' என்னும் கோட்பாடு நனவாகியுள்ளது. இந்த முகாம்களினால் 51.64 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர். குடும்பநலப்பணியில் தமிழ்நாட்டின் செயல் திறன் நாட்டிலேயேதலை சிறந்தது என்று அறிவிக்கப்பட்டுள்ளது தமிழ்நாட்டில் தடுப்பூசித் திட்டம் மிகமிகப் பயனுள்ளதாகவுள்ளது எதைத் தனிப்பட்ட முறையில் நடத்தப் பெற்ற மதிப்பீட்டாய்வின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது அரசின் அனைத்து மருத்துவமனைகளிலும், மருந்தகங்களிலும் மருந்துப் பொருட்கள் தேவையான அளவில் இருப்பதற்கு உறுதி செய்யும் வகையில், நடப்பு ஆண்டில் மருந்துகளுக்காக இதுவரை இல்லாத அளவிற்கு இப்போது பெரும் அளவில், அதாவது ரூ. 70 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

24. :: புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்'' (Puratchi Thalaivi Dr. Jayalalitha Girl Child Protection Scheme) என்றழைக்கப்படும் ஒரு புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. பெண் குழந்தை முதலாவது பிறந்த தினத்தின்போதும், அக்குழந்தையின் கல்விக்காகவும் அக்குழந்தைக்கு இருபத்தொரு வயதாகும் போது ரூ. 10,000 மொத்தத் தொகை வழங்கவும் உரிய வகையில் அக்குழந்தைக்குச் சிறப்புப் பயன்கள் வழங்க இதுவகைசெய்யும். கொடிய பழக்கமான பெண் சிசுக்கொலைக்கெதிராக சமுதாய விழிப்புணர்ச்சி எழுவதற்கு உரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுவரும் அதே வேளையில், மரபு விலங்கை உடைத்தெறியத் தாய்மார்களுக்கு ஊக்கமளிக்கவும், வேண்டாத பெண்குழந்தைக்கு நல்ல வாழ்க்கை அமைவதற்கான வாய்ப்பை அளிக்கவும் அரசு '' தொட்டில் திட்டம் '' என்னும் திட்டத்தைக் கொண்டுவந்துள்ளது. இக்குழந்தைகளை அரசு தனது பாதுகாப்பில் எடுத்துக்கொண்டு பேணி வளர்க்கும், உலகவங்கியின் உதவியுடன், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் வலுப்படுத்தப்பட்டுள்ளது. 6 திங்களிலிருந்து 36 திங்கள் வரையிலான வயதுத் தொகுதியில் உள்ள குழந்தைகளும் தாய்மார்களும் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுகிறார்கள். பெண்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கு மகளிர் குழுக்களுக்கு நிதி உதவி வழங்கும் 'ஒருங்கிணைந்த பெண்கள் மேம்பாட்டுத் திட்டம்' ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒரு இலட்சம் பெண்கள் உதவி பெறுவார்கள். உடல் ஊனமுற்றோருக்கான திட்டங்களுக்குத் தனி முக்கியத்துவம் கொடுக்க, உடல் ஊனமுற்றோருக்காக ஒரு புதிய துறை உருவாக்கப்பட்டுள்ளது. உடல் ஊனமுற்றோருக்கு உதவி செய்வதில் மிகச் சிறந்த செயல்பாட்டுக்காக, எந்த மாநிலமும் பெற்றிராத அளவில், 15 தேசிய விருதுகளை வென்று தமிழ்நாடு தனிச்சிறப்பு எய்தியிருக்கிறது.